**சேர்ந்து எழுத்தைக் கண்டுபிடித்தல்**
எழுத்துக்களும், குறியீடுகளும் உங்களுடைய குழந்தையை நன்கு கவரும். உங்களின் உதவியுடன் குழந்தை எழுத்துக்களையும், அதன் வடிவங்களையும் தெரிந்துகொள்ளும். குழந்தை தாள்களையும், எழுதுகோல்களையும் எடுத்துப் பரீட்சித்துப் பார்க்க முயற்சிக்கும்.




**நூலகங்களுக்குச் செல்லுதல்**
புத்தகங்கள் நல்ல நண்பர்கள் ஆகலாம். நீங்கள் உங்களுடைய பிள்ளையுடன் நூலகங்களுக்குச் சென்று அங்கு புத்தகங்களையும், ஏனைய கற்றல் சாதனங்களையும் இரவலாக வீட்டிற்கு எடுத்து வரலாம்.




**பல்வேறு ஊடகப் பாவனைகள்**
எல்லாப் புலன்களினதும் அனுபவங்களும், திறந்தவெளி விளையாட்டனுபவங்களையும் போலவே ஊடகங்களின் பன்முகத்தன்மையின் அனுபவங்களும் குழந்தைகளின் நாளாந்த வாழ்க்கையின் அங்கமாகின்றன. உங்கள் பிள்ளை புத்தகங்களின்வாயிலாகவும், திரைப்படங்கள், ஒலிப்புத்தகங்கள் மற்றும் **Apps** போன்றவற்றின் உதவியுடனும் கதைகளின் உலகத்தைக் கண்டறிய நீங்கள் உறுதுணையாக இருங்கள்.



**படம் மற்றும் எழுத்துமூலமான ஆக்கத்திறன்**
தாளில் வரைதல், வர்ணம்தீட்டுதல்; உங்கள் பிள்ளையுடன் சேர்ந்து புகைப்படங்களை எடுத்து, அவற்றைக் கைத்தொலைபேசியிலும், கைக்கணணியிலும் வடிவமைத்தலானது, அப்பிள்ளை தன்னைப் படம் மற்றும் மொழிமூலமாக வெளிப்படுத்த ஊக்கமளிக்கின்றது.



# கதைகளோடு வளர்தல்

உங்கள் பிள்ளையின் ஆரம்ப வயதுகளில் அதன் மொழி மற்றும் வாசிப்பு வளர்ச்சியில் நீங்கள் இவ்வாறு உதவிசெய்யலாம்.



SIKJM
ISJM
ISMR

### முதல் மொழியில் கதைத்தல்

நீங்கள் உங்கள் குழந்தையுடன் உங்களுக்கு மிக நன்றாகத் தெரிந்த மொழியில் கதைப்பதால், அப்பிள்ளை வேற்று மொழிகளைக் கற்பதற்கு அதுவே ஒரு திடமான அத்திவாரமாக அமைகின்றது.



### சொல்வதைக் கேட்பதும் அதற்குப் பதிலளிப்பதும்

உங்களுடைய பிள்ளை உங்களுடன் நிறையக் கதைப்பதன் மூலம் அதனுடைய பேச்சாற்றல் அதிகரிக்கின்றது. நீங்கள் உங்கள் குழந்தை அவதானிக்கின்ற விடயங்கள் பற்றிக் குழந்தையுடன் உரையாடுவதால் குழந்தையின் சொல்வளம் விருத்தியாவதுடன் குழந்தைக்குப் புதியசொற்களைத் தெரிந்துகொள்ளும் ஆர்வமும் அதிகரிக்கும்.



### மொழிமூலமான இணைந்த மகிழ்ச்சி

மொழியுடன் அழகாக விளையாடலாம். சிறுவர்களுக்கான கவிதைவரிகள், பாடல்கள் மற்றும் உடலசைவு விளையாட்டுக்கள் போன்றன, ஒரு குழந்தை ஆசையுடன் மொழியைப் புரிந்துகொள்ள உதவுகின்றன.





### கதைகள் கூறுவதும், படங்கள் பார்ப்பதும்

கதைகளும், படங்களும் உங்களுடைய பிள்ளையை புதிய உலகத்திற்கு அழைத்துச் செல்லும். குழந்தை உங்களுடன் சேர்ந்து புதியவிடயங்களைத் தெரிந்து கொள்வதோடு பல புதிய வார்த்தைகளையும் தெரிந்து கொள்ளும்.



விளக்கப்படங்கள்: Claudia de Weck

## சுவிஸ் குழந்தைகள் மற்றும் இளையோருக் கான ஊடகங்களின் நிறுவனம் SIKJM/ISJM/ISMR

**SIKJM/ISJM/ISMR** ஆனது சிறுவர் மற்றும் இளையோர் இலக்கியத்திலும், வாசிப்பை ஊக்குவிப்பதிலும் ஈடுபடுகிறது. இது சிறுவர் மற்றும் இளையோரின் மொழி மற்றும் இலக்கியத்தில் ஆர்வத்தைத் தூண்டும் திட்டங்களை செயல்படுத்துவதோடு, துறைசார் வல்லுநர்கள் மற்றும் பெற்றோர்கள் எவ்வாறு பிள்ளைகளின் மொழி வளர்ச்சிக்கும், வாசிக்கக் கற்றுக் கொள்வதற்கும் உதவ முடியும் என்பதற்கு வழிகாட்டுகிறது.

**SIKJM/ISJM/ISMR** இணையதளத்தில் நீங்கள் வாசித்துக் காட்டுவதற்கான ஊடக பரிந்துரைகளையும், இருபதிற்கு மேற்பட்ட மொழிகளில் செய்யுள்களையும், பாடல் வரிகளையும் கொண்ட தரவுத் தளத்தையும் காணலாம்.

**Buchstart/Né pour lire/Nati per leggere** இன் ஒரு பகுதியாக உங்கள் பிறந்த குழந்தைக்கான புத்தகப் பொதியைப் பெற்றுக்கொள்ளலாம். நூலகங்கள் பாடல் மற்றும் கதை நேரங்களுக்கு உங்களை அழைக்கின்றன. **Schenk mir eine Geschichte/1001 histoires** திட்டத்தில் சுவிஸ் நாட்டின் ஜெர்மன் மொழி பேசும் பகுதிகளிலும் ரோமாண்டியிலும், இருபதுக்கும் மேற்பட்ட மொழிகளில் வழங்கப்படும் வாசிப்பு ஊக்க பயின்முறையில் கலந்து கலந்துகொள்ளலாம்.

**மேலதிக தகவல்களுக்கு:**

www.sikjm.ch / www.isjm.ch / www.ismr.ch


**SIKJM**
**ISJM**
**ISMR**

Schweizerisches Institut
für Kinder- und Jugendmedien

Institut suisse
Jeunesse et Médias

Istituto svizzero
Media e Ragazzi